திரு. பெ. ஆசையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல தாலுக்காக்களில் தாலுக்காவிற்கு குறைந்தபட்சம் ஒரு அரசு மருத்துவமனை கூட இல்லாமல் இருக்கிறது. இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தின் வழியாக போதிய சிகிச்சையைப் பெற முடியாமல் மக்கள் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, குறைந்தபட்சம் ஒரு தாலுக்காவிற்கு ஒரு அரசு மருத்துவமனை இருந்தாக வேண்டும் என்கிற இலக்கை இந்த அரசு மேற்கொள்ளுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசில் 30 ஆயிரம் பேர்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அந்த இலக்கை எட்டியிருக்கிறோம். மேலும் அது 20 ஆயிரம் பேர்களுக்கு விரிவுபடுத்த வேண்டும் என்ற இலக்கை நோக்கி நாம் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம். தாலுக்கா மருத்துவ மனைகளை உருவாக்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. உங்களுடைய பகுதியிலே இதுபோன்ற தேவைகளும் நோயாளிகளுடைய எண்ணிக்கையும் அதிகமாக இருக்கும் என்று சொன்னால், அதற்கான திட்டங்களை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

* 5516—திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இதயத்துறைப் பிரிவிற்கு புதிதாகக் கட்டிடம் கட்டப்பட்டு நவீன கருவிகள் வழங்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அப்பிரிவு இன்னும் இயங்காமல் இருக்க காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இதயத்துறை 10—7—1989 முதல் இயங்கிவருகிறது.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே இதயத் துறையில் மருத்துவர் கார்டியாலஜிஸ்ட் யார் யாரை நியமித்தாலும்

அவர்கள் விடுமுறை எடுத்துக்கொண்டு வராமல் இருக்கிறார்கள். எனவே இந்தத் துறையே ஒரு முடக்கப்பட்ட துறையாக இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கேயுள்ள திருநெல்வேலி மருத்துவமனைக்கு ஒரு இதயத்துறைமருத்துவரை, கார்டியாலஜிஸ்ட்டை உடனடியாக வேலையில் சேர உத்தரவிடுவாரா என்று அறிய விரும்புறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது போன்ற தனிச் சிறப்புப் பகுதிகளை பல்வேறு இடங்களில் துவக்குகின்றபோது, அரசுக்கு இருக்கிற பிரச்சினையும் இது தான். பெரும்பாலான மருத்துவர்கள் சென்னையைவிட்டு நகருவதற்கே மறுக்கிறார்கள். உத்தரவு போடுகின்றபோது, அவர்களுக்கு இருக்கிற பாதுகாப்போடு விடுப்பை எடுத்துக் கொண்டு, இங்கே இருந்துவிடுகிறார்கள். உறுப்பினர்களும் இது போன்று ஒத்துழைப்பார்கள் என்று சொன்னால், நிச்சயமாக அங்கே மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள். அவர்களே, ஏதேனும் மருத்துவர்கள் அங்கே பணியாற்றுவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டால், அவர்களைக் கூட அங்கே போடுவதற்கு அரசு தயாராக இருக்கிறது. ஏன் என்றால், பல்வேறு சிறப்புப் பகுதிகளைத் துவக்குகின்றபோது இந்தப் பிரச்சினைகள் அரசுக்கு இருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டவே இதை நான் குறிப்பிடுகிறேன்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பு படித்தவர்கள் அரசு வேலைக்கு வருகின்றபோது அவர்கள் பிரைமரி ஹெல்த் சென்டரிலே 3 ஆண்டுக்காலம் பணியாற்ற வேண்டும் என்ற விதிமுறை இருக்கிறது. அதுபோன்று சிவில் சர்ஜன்களாக பதவி உயர்வு பெறுபவர்கள் சென்னையைத் தவிர்த்து பிற நகரங்களில் உள்ள மருத்துவமனைகளில் கட்டாயம் இரண்டு ஆண்டுகள் மூன்று ஆண்டுகள் பணி புரியவேண்டும் என்ற திட்டத்தை அல்லது சட்டத்தை அரசு இயற்றுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக்கு இருக்கிற பிரச்சினை எல்லாம் அப்படிப்பட்ட சிவில் சர்ஜன்களைப் போடுகிறபோது, இதுபோன்ற சட்டங்கள் இருந்தாலும், அவர்களுக்கே இருக்கிற பாதுகாப்போடு விடுப்பை எடுத்துக்கொள்கிறார்கள். 3 மாதம், 4 மாதம் என்று விடுப்பை எடுத்துக் கொள்கிறபோது, வேறு ஆளை அங்கே போடமுடிவதில்லை. அதற்கான உடனடி நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. இதையெல்லாம் இந்த அரசு பரிசீலித்து வருகிறது. உடனடியாக இவ்வாறு ஒட்டு மொத்தமாக அதிக நாட்கள் விடுப்பிலே இருக்கிற

மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான செயற்குறிப்புகள் கூட அரசினுடைய கவனத்திலே இருக்கிறது. ஆகவே மேலும் உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிற கருத்துக்களைப் பரிசீலித்து இதுபோன்று மருத்துவமனைகளிலே மருத்துவர்களை நியமிப்பதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாசுக் கட்டுப்பாடு வாரியம்.

*7771 திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) மாசுக்கட்டுப்பாடு வாரியத்தை (போர்டு) சுற்றுச்சூழல் கட்டுப்பாடு ஆணையமாக (அத்தாரிடி) உயர்த்த அரசு தீர்மானித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

10.05 மணி.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, இன்றைய விஞ்ஞான உலகத்தில் தூசு போன்ற, தண்ணீரிலே வருகின்ற மாசுபோன்ற சத்தத்தால் வருகின்ற மாசு போன்றனவகள் எல்லாம் மனித வாழ்க்கைக்கு மிகவும் இடையூறாக இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் சுற்றுச் சூழல் கட்டுப்பாடு வாரியத்தை நீங்கள் அமைத்திருக்கிறீர்கள். ஆனால் வாரியம் என்று சொல்கின்றபோது அது தனக்குத் தானே சில திட்டங்களை வகுத்துக் கொண்டு தன்னிச்சையாக அது இயங்க முடியாது. தன்னிச்சையாக இயங்காத ஒன்று செம்மையாக பணிகளை ஆற்ற முடியாது. ஏனென்றால் அதாரிட்டி என்று சொன்னால்தான், அவர்களே திட்டங்களைத் தீட்டி, அவர்களே செயல்படுத்துகின்ற வசதி, உரிமை அவர்களுக்கு இருக்கிறது. எனவே மீண்டும் அதனைப் பரிசீலித்து அதை ஆணையமாக, 'அதாரிட்டியாக' மாற்றுவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாரியம் என்று சொல்கின்றபோது ஒரளவிற்கு அரசு கட்டுப்பாட்டோடும்,